## மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம் செய்யூர்

## அசல் வழக்கு எண்.17/2023

## PW1

இந்நீதிமன்ற எழுத்தர் திரு.தேவகி, Grade III Bench Clerk என்பவரால் முறையோடு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு வாதி தரப்பில் 1 ஆம் சாட்சியத்தின் வாக்குமூலம் 1875 ம் ஆண்டின் 10வது சட்டத்தின் வரையறைகளுக்கு உட்பட்டு 2026ம் ஆண்டு ஜனவரி திங்கள் 23–ம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | |
|---|---|
| பெயர். திருமதி.கீதாஞ்சலி<br>வயது. | நாள்.23.01.2026 |
| க/பெ. திரு.முருகன் | தொழில் |
| கிராமம் | வட்டம், |

வா.சா.1 அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு வாதி தரப்பில் முதல் நிலை விசாரணை செய்யப்படுகிறார்.

1. நான் இந்த வழக்கில் வாதி ஆவேன். என்னுடைய முதல் விசாரணை சாட்சியத்தை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். பிரமாண வாக்குமூலம் நான் சொல்லி தான் தயாரிக்கப்பட்டது. பிரமாண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியும். அதில் உள்ள விவரங்கள் உண்மையானது. அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான்.

1. 27.03.1992 தேதியிட்ட நடராஜ நாயக்கர் மற்றும் பல நபர்கள் சேர்ந்து எழுதிக்கொண்ட பதிவுப் பெற்ற பாகப்பிரிவினை பத்திரம் ஆவண எண்.384/1992 சான்றிட்ட நகல் வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

2. 11.09.2018 தேதியிட்ட முருகன் அவர்கள் கீதாஞ்சலிக்கு எழுதிக்கொடுத்த பதிவுப் பெற்ற செட்டில்மெண்ட் பத்திரம் ஆவண எண்.2257/2018 சான்றிட்ட நகல் வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

3. 03.04.2023 தேதியிட்ட கீதாஞ்சலி, க/பெ.முருகன் பெயரில் தாக்கலாகியுள்ள கணினி பட்டா எண்.196 இணைய வழி நகல் வா.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

4. 03.04.2023 தேதியிட்ட மோகன்தாஸ், த/பெ.நடராஜ நாயக்கர் பெயரில் தாக்கலாகியுள்ள கணினி பட்டா எண்.1909 இணைய வழி நகல் வா.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

5. 03.04.2023 தேதியிட்ட கீதாஞ்சலி, க/பெ.முருகன் பெயரில் தாக்கலாகியுள்ள பட்டா எண்.196 க்கான புதிய அ பதிவேடு உண்மை நகல் வா.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

6. 03.04.2023 தேதியிட்ட கீதாஞ்சலி, த/பெ.முருகன் பெயரில் தாக்கலாகியுள்ள பட்டா எண்.196 க்கான அடங்கல் பதிவேடு உண்மை நகல் வா.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

7. காவல் உதவி ஆய்வாளர், அணைக்கட்டு அவர்களால் வழங்கப்பட்ட சி.எஸ்.ஆர் மெமோ அசல் வா.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

8. 03.04.2022 தேதியிட்ட தாவா சொத்துக்களுக்கான புல வரைபடம் உண்மை நகல் வா.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

9. 03.04.2023 தேதியிட்ட கிஸ்து ரசீது ( 2 எண்ணிக்கைகள்) அசல் வா.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

10. புகைப்படம் (8 எண்ணிக்கைகள்) அசல் வா.சா.ஆ 10 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

11. சி.டி. அசல் வா.சா.ஆ.11 ஆக குறியீடு செய்யப்படுகிறது. தாவாப்படி தீர்ப்பாக வேண்டிக்கொள்கிறேன்.

(பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணைக்காக வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது)

Taken down by me in open read over to the witness and acknowledged by him/her to be correct.

Sd/-Tmt.N.Valliamma
DM Cum JM
Cheyyur (FAC)